# சீனருக்கு உள்ள தெளிவுகூட ராயருக்கு இல்லையே

## இந்திய சமுதாயம் வேதனை

● கவின்மலர்



ராயர்



சா கீ சின்

உரிமை
குரலற்ற சமுதாயத்தின் அரசியல் எழுச்சி

MITRA JABATAN PERDANA MENTERI

பாரிட் புந்தார், டிச. 1-

ஒரு சீனரான ராசா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சா கீ சின்னுக்கு இருக்கின்ற தெளிவும் அக்கறையும் ஜெலுத்தோங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சனீஸ்வர நேதாஜி ராயர் த/பெ ராஜாஜிக்கு இல்லையா என்று இந்திய சமுதாயம் வேதனை குரல் எழுப்பத் தொடங்கியுள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம் பேசிய சா கீ சின் பி40 இந்திய சமுதாயத்திற்கு உதவு வதற்காக மித்ராவிற்கு ஒதுக்கப்பட்ட 10 கோடி ரிங்கிட் மானியத்தை 20 கோடியாக உயர்த்த வேண்டும் என்று பேசினார். அதற்கு தக்க விளக்கங்களை அவர் தந்துள்ளார். அதன் வழி அவர் எந்த அளவிற்கு இந்திய சமுதாயத்தின் உணர்வுகளையும் தேவைகளையும் புரிந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய தலைவர்கள்தான் பல இனங்களைக் கொண்ட இந்நாட்டிற்குத் தேவை என்பது தெளிவாகிறது.

பிரதமர் இலாகா கீழ் செயல்படும் மித்ரா தற்போது இந்திய சமுதாயத் தின் பொருளாதார அந்தஸ்தை உயர்த்துவதற்கு ஆக்கப்பூர்வமான திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் மித்ராவுக்கு ஒதுக்கப்படும் நிதி அதிகரிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத் தினார்.

ஆனால் இதே நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சில நாட்களுக்கு முன்னர் பேசிய ராயரின் பேச்சு அவரது அறியாமையை மட்டுமே காட்டியது. அண்மையில் கப்பளா பத்தாஸில் நடந்த தேசிய அளவிலான செந்தமிழ் விழாவில் தமிழ் வாழ்த்து கடவுள் வாழ்த்து, திருவள்ளுவர் படம் ஆகியவற்றுக்கு தடை விதித்த விவகாரம் குறித்து பேசிய கல்வி அமைச்சர் ஃபட்லினா சிடேக் இவ்விவகாரம் குறித்து கல்வி அமைச்சின் சார்பில் தமது மன்னிப்பைத் தெரிவித்துக் கொண்டார். அவரது மன்னிப்பை இந்திய சமுதாயம் பெருந்தன்மை யுடன் ஏற்றுக்கொண்டது.

ஆனால் பரிதாபத்திற்குரிய ஒன்றாக ராயர் பேசிய பேச்சு இந்திய சமுதாயத்திற்கு பெரும் வெறுப்பையும் வேதனையையும் ஏற்படுத்தியது என்று சொன்னால் மிகையாகாது. அமைச்சருக்கு நன்றி சொல்ல எழுந்த ராயர் சம்பந்தமே இல்லாமல் இந்திய சமுதாயத் திற்கு இன்னுமோர் அரசியல் கட்சி தேவையில்லை என்று கூச்சலிட்டார்.

அது அண்மையில் பினாங்கு மாநில முன்னாள் துணை முதல்வர் முனைவர் ப. இராமசாமி அறிமுகப்படுத்திய உரிமை கட்சி பற்றியதே என்பது எல்லாருக்கும் தெரியும். மற்றுமோர் இந்தியர் கட்சி உருவாக்கத்தில் இவருக்கு என்ன நஷ்டம்?

இவரைப் போன்ற தலைவர்கள் குரலற்றவர்களின் குரலாகவோ இந்திய சமுதாயத்தின் குரலாகவோ ஒலித்திருந்தால் இந்திய சமுதாயத் திற்காக மற்றொரு கட்சி உருவாக வேண்டிய அவசியம் என்ன? ராயர் மனசாட்சியுடன் பேச வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள தாங்கள் எத்தனை முறை இந்திய சமுதாயத்திற்கும் குரலற்றவர்களின் குரலாகவும் எதிரொலித்து இருக்கிறீர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?

அப்படிப்பட்டத் தாங்கள் மற்றொரு கட்சி தேவையில்லை என்பதை மட்டும் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறீர்களே ஏன்? மற்ற இனத்தவர்களும் மற்ற கட்சிக்காரர்களும் தங்களை மெச்சிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவா?

தாங்கள் நாடாளுமன்றத்தில் பேச எழும் போதெல்லாம் கூச்சலிடுவதைத் தவிர வேறு எதனையும் பயனாகப் பேசியதாக தொலைக்காட்சிகள் காட்டியதில்லை.

தொலைக்காட்சிகள்தான் தங்கள் கூச்சலை மட்டும் காட்டுகின்றன என்றால் எந்த ஒரு சமூக ஊடகமும் தங்களின் பயனான பேச்சுகளைக் காட்டியதில்லையே ஏன்? இந்திய சமுதாயத்திற்கு மற்றொரு கட்சி தேவையில்லை என்று மிக வீர ஆவேசமாக கூச்சலிட்ட தாங்கள் இந்தியர்கள் நலனை நடப்பு அரசாங்கம் பார்த்துக் கொள்ளும் என்கிறீர்களே.

அப்படி பார்த்துக்கொண்டிருந்தால் தங்கள் கட்சியின் மூத்த தலைவர் லிம் கிட் சியாங் அவ்வப்போது அரசாங்க குறைகளைச் சுட்டிக்காட்டி வருகிறாரே ஏன்? அண்மையில் கூட பொதுத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்குங்கள் என்று நினைவுறுத்தி இருக்கிறாரே ஏன்? அவரைவிட தாங்கள் இந்நாட்டு அரசியலில் பழுத்த அனுபவம் உள்ளவரோ?

இனியாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களில் பேசும்போதும் இந்திய சமுதாயத்திற்காகவும் குரலற்றவர்களின் குரலாகவும் பயனான பேச்சுகளை மட்டும் பேசுங்கள்.

இல்லை என்றால் அடுத்த முறை நாடாளுமன்றத் திற்குப் போட்டியிடும் போது மிகவும் பாதுகாப்பான ஜெலுத்தோங் தொகுதியில் போட்டியிடாமல் இந்திய வாக்காளர்களும் மலாய் வாக்காளர்களும் அதிகமாக உள்ள தொகுதியில் போட்டியிடுங்கள் அப்போது தெரியும் மக்கள் எந்த அளவிற்கு தங்களைப் போன்ற வெத்து வேட்டு வேட்பாளர்களை வெறுக்கிறார்கள் என்பது.

---

பத்து மாவுங் சம்பவம்:

அந்நியத் தொழிலாளர்களுக்கு சொக்சோ செலுத்தத் தவறிய

## முதலாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



கோலாலம்பூர், டிச. 1-

பினாங்கு பாயான் லெப்பாஸ் அருகில் பத்து மாவுங்கில் கட்டுமானத்தளம் இடிந்து விழுந்த சம்பவத் தில் பாதிக்கப்பட்ட 80 வெளிநாட்டுத் தொழிலாளர்களுள் ஐவருக்கு பெர்கேசோ சந்தா செலுத்தப்படவில்லை. சம்பந்தப்பட்ட முதலாளி தரப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனிதவள அமைச்சர் வ. சிவகுமார் நேற்று எச்சரித்தார்.

அந்நியத் தொழிலாளர்களுக்கு சொக்சோ சந்தா செலுத்தப்பட வேண்டியது கட்டாயமாகும். இது 1969 தொழிலாளர் சமூகப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 6இன் கீழ் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இதனை மீறும் முதலாளி தரப்பினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்ட அவர், சொக்சோவில் அந்நியத் தொழிலாளர்களைப் பதிவு செய்து சந்தா செலுத்தத் தவறினால் முதலாளிகளுக்கு 10 ஆயிரம் ரிங்கிட் அபராதம் அல்லது 2 ஆண்டுகள் சிறை அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம் என்றார்.

இந்த விவகாரத்தில் மனிதவள அமைச்சு எவ்வித சமரசப் போக்கிற்கும் இடமளிக்காது. இந்தச் சம்பவத்தில் 4 அந்நியத் தொழிலாளர்களுள் இருவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமுற்றனர். சம்பவத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பெர்கேசோவில் பதிவு செய்யப்படாதது தெரிய வந்தது என்று அவர் தெரிவித்தார்.

அந்நியத் தொழிலாளர்களை பெர்கேசோவில் பதிவு செய்வது 2020ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியில் இருந்து அவசியம் என வலியுறுத்தப்பட்டது. இவ்வாண்டு அக்டோபர் 31ஆம் தேதி நிலவரப்படி 18 லட்சத்து 80 ஆயிரத்திற்கும் அதிகமான அந்நியத் தொழிலாளர்கள் பெர்கேசோ பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப் படுகின்றனர். அந்நியத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 4,566 விபத்துகள் பெர்கேசோவில் பதிவு செய்யப்பட் டுள்ளன என்று சிவகுமார் கூறினார்.

---

# சிலாங்கூர் சுற்றுலா அம்சங்களுக்கான சிறந்த தளம் 'Fiesta Pusing Selangor Dulu'







கிள்ளான், டிச. 1-

கிள்ளான் வட்டார சுற்றுலாத்துறைத் தூதர் என்ற முறையில் தனது பங்களிப்பை வலுப்படுத்தும் முயற்சியில் ஜிஎம் கிள்ளான், டூரிசம் சிலாங்கூர் தரப்புடன் ஒன்றிணைந்து பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக 'Fiesta Pusing Selangor Dulu' நிகழ்ச்சியின் வாயிலாக உள்நாட்டு சுற்றுலாத்துறையை வலுப்படுத்தவும் ஜிஎம் கிள்ளான் தரப்பு முனைந்துள்ளது. இந்நிகழ்ச்சியானது டிசம்பர் 9, 10ஆம் தேதிகளில் (வார இறுதி) ஜிஎம் கிள்ளான் மொத்த விற்பனை மையத்தின் கீழ்த்தளத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன் டூரிசம் சிலாங்கூர் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட 'Nak Bercuti? Pusing Selangor Dulu!' பிரச்சாரத்தின் அடிப்படையில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. முன்னதாக டூரிசம் சிலாங்கூர் 2020ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட அந்தப் பிரச்சாரத்தின் வாயிலாக சிலாங்கூர் மாநில சுற்றுலாத்துறை ஆக்கப்பூர்வமான வளர்ச்சியை அடைந்ததுடன் பொதுமக்களிடம் இருந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் பள்ளி விடுமுறை வரும் இச்சமயத்தில் 'Fiesta Pusing Selangor Dulu' குடும்பத்தாருடன் செலவிடக்கூடிய ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சியாகும் என ஜிஎம் கிள்ளான் பிரேண்ட் தொடர்பு முதன்மை நிர்வாகி நோர் சுஹைடா ஒஸ்மான் கருத்துரைத்தார்.

குடும்பத்தினர் தங்களின் விடுமுறையைத் திட்டமிட்டு செலவழிக்க இந்நிகழ்ச்சி நல்ல தொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. இரு நாட்களுக்கு நடத்தப்படும் இந்நிகழ்ச்சியில் நாடு தழுவிய அளவில் புகழ்பெற்ற சுற்றுலாத் திட்டங்களைச் சார்ந்த குறைந்தது 15 முகவர்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றனர்.

கேளிக்கை பூங்கா, ஹோட்டல், விவசாயச் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைச் சார்ந்த முகவர்கள் அவர்களாவர் என்றும் நூர் சுஹைடா கூறினார். இந்நிலையில் இந்நிகழ்ச்சி நடத்தப்படும் கால கட்டத்தில் வருகையாளர்களுக்கு மேலும் உற்சாகம் அளிக்கும் வகையில் அதிர்ஷ்டக் குலுக்கலும் நடைபெறும்.

2 நாட்களுக்கு நடத்தப்படும் இந்த அதிர்ஷ்டக் குலுக்கலில் தரமான பரிசுகளை வெல்வதற்கு வருகையாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதேசமயம் முகவர்களும் தங்கள் விற்பனையை விளம்பரப்படுத்துவர்.

இந்த சிலாங்கூர் சுற்றுலா முகவர்களுள் Mercure Kuala Lumpur Glenmarie, Sky Mirror Tour & Travel Sdn. Bhd., Chocolate Museum, Wyndham Acmar Klang Hotel, Selangor Fruit Valley, Eastin Hotel Kuala Lumpur, Premiere Hotel, Hotel Tenera Bangi, Rumah Hutan Terapi Alam, Heritaste Jenjarom, Pertubuhan Kembara anak Seni Selangor (P.K.A.S.), Chemilan, GL Play, I-City Theme Park termasuklah Pihak Berkuasa Tempatan, Majlis Perbandaran Klang (MPK) அடங்குவர்.

VA